**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் விகாரி வருடம் தமிழ் மாதம் சித்திரை 17–ஆம் நாள் ஆங்கில வருடம் 2020 ஏப்ரல் 30 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்:1**

**ந.க.எண்.666 /2020/எச்1**

காங்கயம் நகராட்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக குடியிருப்பு பகுதிகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் முதிர்வு கொசுக்களை அழிக்க தேவையான கிருமிநாசினி மருந்து பைரத்திரம் எக்ஸ்டிரேக்ட் 2% மற்றும் அசுத்தமான நீர்நிலைகளில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களினால் கொசுக்கள் உற்பத்தி ஏற்பட்டு பொது மக்களுக்கு அரிப்பு மற்றும் தொல்லைகள் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு கொசுப்புழுக்களை அசுத்தமான நீர்லைகளிலிருந்து அழிக்க தேவையான மருந்து பேசில்லஸ் துரின்சன்சீஸ் எனும் கிருமி நாசினி மருந்துகள் வாங்கிடவும் நல்ல தண்ணீரில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களினால், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக அபேட் மருந்து தெளிக்கும் பணிக்கு தேவையான அபேட் மருந்து வாங்கிடவும், 2020–2021 –ம் ஆண்டிற்கு பொதுநிதியிலிருந்து தொகை வழங்கிடவும் மேலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் மேற்படி கிருமிநாசினிகள் வாங்கிட உத்தேச செலவினம் ரூ.9.00 லட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலுக குறிப்பு:**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1570 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:2**

**ந.க.எண்.890 /2019/எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் குடியிருப்பு பகுதிகளில் உள்ள வடிகால் பகுதி காலை ஓரங்கள், பொது இடங்கள், தெருக்கள், பொது இடங்கள் தெருக்களின் இருபுறமும் வளர்ந்துள்ள புல், முள் செடிகள் வளர்ந்து சாக்கடை நீர் சீராக செல்லாமல் அடைப்பு ஏற்படுவதை தடுக்கும் வகையிலும் குடியிருப்பு பகுதிகளில் புற்களினால் விஷ ஜந்துகள் மூலம் ஆபத்து ஏற்பட காரணமாக உள்ளதாலும் தேவையற்ற வளர்ந்துள்ள புல் மற்றும் முள் செடிகள் அப்புறப்படுத்தி அழிக்க தேகையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இதற்கு தேவையான கலைகொல்லி மருந்து ஆகியவை 2020–2021 ம் ஆண்டிற்கு பொது சுகாதார பிரிவின் மூலம் வாங்கிடவும் உத்தே செலவினமாக ரூ.4.00 இலட்சத்திற்கும் இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் விதி எண்.15 ன் கீழ் பொருள் வாங்கிடவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணி பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி விதி எண் 15ன் படி பணியை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1571 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்:3

**ந.க.எண்.481/2020/எச்1**

காங்கயம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் கொரேனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அப்பகுதியில் உள்ள குடியிருப்புகள், வணிக வளாகங்கள் , தொழிற்சாலை பகுதிகள், பேரூந்து நிலையம், தினசரி மார்கெட், வாரச்சந்தை, அரசு அலுவலகங்கள், அரசு குடியிருப்புகள் அரசு மருத்துவமனை, மற்றும் தனியார் மருத்துவமனை அரசு மேல் நிலைப்பள்ளி துவக்கப்பள்ளிகள் ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதி, மாணவியர் விடுதி, கோவில்கள் வழிபாட்டு தளங்கள், மசூதிகள், தேவாலயங்கள், அம்மா உணவகம், மின்மயானப்பகுதி பேரூந்து நிறுத்தும் இடங்கள், காங்கயம் பேரூந்து பணிமனை, வெளிநாடுகளில் இருந்து வந்து இந்நகராட்சி பகுதியில் வசிப்பவர்களின் குடியிருப்புகள், வெளிமாநிலங்களுக்கும் டெல்லியில் நடைபெற்ற மாநாட்டிற்கு சென்று வந்தவர்கள், அவர்களின் குடியிருப்புகள் நகராட்சியில் தூய்மை பணிக்கு பயன்படுத்தும் வாகனங்கள் அலுவலக வாகனங்கள் வெளியூரில் இருந்து இந்நகராட்சி எல்லைக்குள் வரும் வாகனங்கள் ஆகிய மேற்காணும் அனைத்து பகுதிகளும் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக களப்பணிகளுக்கு தேவையான கைதெளிப்பான்கள் மற்றும் விசைத்தெளிப்பான்கள் வாங்கவும் லைசால் என்னும் கிருமி நாசினியை கொண்டு தொற்று நீக்கம் செய்திடவும், மேலும் தனியார் டிரேக்டர் மூலம் சின்டெக் டேங்க் பொருத்தப்பட்டு அதன் மூலம் நகரின் முக்கிய சாலைகல் 1% சோடியம் ஹைப்போகுளோரைடு தெளித்தல் பணி செய்தல் நகராட்சி தூய்மை பணியாளர்களும் அலுவலக பணியாளர்களுக்கும் ஒப்பந்த பணியாளர்களுக்கும் தேவையான பாதுகாப்பு உபகரணங்களான கையுறை, முககவசம், முழு உடல் கவச உடை, ஆகியவற்றை தேவையான அளவில் வாங்கிடவும், பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பு குறித்து நோட்டீஸ் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளுதல்.

மேலும் ஒவ்வொரு நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் அலுவலகத்தில் இருந்து வெளியில் சென்று வரும் போது ஒவ்வொரு முறையும் கிருமிநாசினியை கொண்டு கைகளை கழுவி சுத்தமாக வைத்து கொரோா தொற்று ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை இருக்க தேவையான சேனிடைசர்கள், கைகழுவும் கிருமி நாசினிகள் வாங்கி பயன்படுத்துதல், நகரின் முக்கிய சாலை ஓரங்களில் அசுத்தமன நீர் நிலைகள் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் ஆகிய பகுதிகளில் தொற்று நீக்கம் செய்ய தேவையான பிளிச்சீங்பவுடர், சுண்ணாம்புத்தூள், ஆகிய கிருமிநாசினிகள் வாங்கி பயன்படுத்தவும், நகராட்சியில் பணிபுரியும் அலுவலகப்பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், நிரந்தர பணியாளர்கள், கொசுபுழுஒழிப்பு பணியாளர்கள், குடிநீர் பணியாளர்கள் ஆகியோர் கொரோனா குறித்து ஊரடங்கு காலத்தில் அத்தியாவசிய பணி மேற்கொள்ள அடையாள அட்டைகள் வழங்குதல் போன்ற கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள இதற்கு ஆகும் ரூ.20.00 இலட்சம் உத்தேச செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்ட விதி எண் 15–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி விதி எண் 15 ன் படி பணியை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1572 . நாள்.30.04.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:4**

**ந.க.எண். 481/2020/எச்1**

காங்கயம் நகராட்சி பகுதியில் கொரானா தொற்று ஒருவருக்கு ஏற்பட்டுள்ளதால், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் கடிதத்தில் கொரோனா தொற்று தொடர்பாக உருவாகும் மருத்துவ கழிவுகளை சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டத்தின் மருத்துவ கழிவுகள் மேலாண்மை – 2016 ன் படி வெளியேற்றுவது குறித்து, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி காங்கயம் நகராட்சியில் சேகரமாகும் மருத்துவ கழிவுகளை தினசரி சேகரித்து முறையாக அப்புறப்படுத்த தங்களது விலைப்புள்ளியில் குறிப்பிட்டவாறு மாதாந்திர கட்டணம் ரூ.20000/–, தினசரி 15 கிலோவிற்கு உட்பட்டும், கூடுதலாக சேகரமாகும் மருத்துவ கழிவுகளுக்கு அரசு அனுமதி அளித்துள்ள கட்டணம் ரூ.52 /– (கிலோ ஒன்றுக்கு) என்ற விகிதத்தில் டெக்னோதெர்ம் இண்டஸ்ட்ரீஸ் கோயமுத்தூர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1573 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:5**

**ந.க.எண்.890 /2019/எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களான பேருந்து நிலையம், இலவச சிறுநீர் கழிப்பிடங்கள் தினசரி மார்க்கெட் சென்னிமலை ரோடு, வாரச்சந்தை குப்பை கிடங்கு ஆகிய இடங்களில் மற்றும் அரசு மருத்துவமனைகள் தனியார் மருத்துவமனைகள் குடியிருப்பு பகுதிகள் மற்றும் அம்மா உணவகம், மின்மயானப் பகுதிகள் ஆகிய பகுதிகளில் பிளிச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்புத்தூள் ஆகியவை 2020–2021 ம் ஆண்டிற்கு பொது சுகாதார பிரிவின் மூலம் வாங்கிடவும் உத்தே செலவினமாக ரூ. 9.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது. எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் விதி எண் .15 ன் கீழ் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணி பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி விதி எண் 15ன் படி பணியை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1574 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:6**

**ந.க .எண்.1759 /2020/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 9 வரையிலான பகுதிகளில் சிறுமின் விசைப்பம்பு திட்டங்கள், குடிநீர் விநியோக மெயின் குழாய்கள் மற்றும் விநியோக குழாய்களில் ஏற்படும் பழுதுகளை குடிநீர் அவசர அவசியம் கருதியும் உடனுக்குடன் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இந்த பராமரிப்பு பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான ஒப்பந்த காலம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை

முடிவடைந்துள்ளதால் மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒப்பந்த புள்ளியை கோரி வேலை ஒப்பந்த வழங்கி 01.03.2020 முதல் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளலாம். எனவே, 01.01.2020 முதல் 08.02.2020 வரையிலான காலத்திற்கு பணியின் அவசரம் கருதி நகராட்சிகள் சட்டம் விதி எண் .15 ன் கீழ் இந்த பராமரிப்பு பணியினை மேற்கொள்ளலாம். மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 8.00 இலட்சத்திற்கு (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர்நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1575 . நாள்.30.04.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:7**

**கோப்பு எண் : 280 /2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கரூர் ரோடு பகுதியில் தேசிய நெடுஞ்லை விரிவாக்கப் பணி நடைபெற்று வருகிறது. இதனால் இப்பகுதியில் அளிக்கப்பட்டுள்ள பகிர்மான குழாய்கள் பழுதடைந்துள்ளது. இந்த குழாய்கள் தார்சாலைப் பகுதிக்கு வருவதால் இதனை பழுதுகள் சரிசெய்ய இயலவில்லை. எனவே கோட்டை மாநகர், திருச்சி ரோடு, அகிலாண்டபுரம் பகுதிகளுக்கு குடிநீல் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. இதனால் பொதுமக்கள் குடிநீருக்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இதனை சரிசெய்ய சாலையின் ஒரமாக குழாய் அமைக்க வேண்டியுள்ளது.

மூர்த்திரெட்டிபாளையம் காலனியில் அமைக்கப்பட்டுள்ள பொது கழிப்பிடத்திற்கு தண்ணீர் விநியோகம் செய்ய பயன்படும் சிறு மின் விசைப்பம்பு திட்டத்தின் பம்பிங் லைன் மற்றும் டெலிவரி லைன் குழாய்களில் பழுதுகள் மற்றும் அமைப்புகள் ஏற்பட்டு உபயோகமற்ற நிலையில் உள்ளது. பொதுமக்கள் நலன் கருதி பொதுக் கழிப்பிடத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு இந்த குழாகளை மாற்றி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எல்.ஜி.ஜி.எஸ் காலணி பகுதிக்கு சரிவர குடிநீர் விநியோகம் கிடைப்பதில்லை. இந்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்து இருப்பது 20 ஆண்டுகள் ஆகிறது. இதனால் இந்த குழாயின் திறன் மிகவும் குறைந்து தண்ணீர் செல்ல இயலாத அளவுக்கு விட்டம் குறைந்துள்ளது. னேவ இந்த குறைபாட்டை சரிசெய்ய இந்த குழாய்களை மாற்றிவிட்டு புதியதாக குழாய்கள் அமைக்கப்பட வேண்டும்.

கோவை ரோடு பகுதியில் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகள் காரணமாக பகிர்மான குழாய்கள் பழுதடைந்துள்ளது இதனால் 10 வார்டு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே இந்த குறைபாட்டை சரிசெய்ய இந்த சாலையின் ஓரமாக குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்பட வேண்டும்.

மேற்படி பணிகள் பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார அவசியம் கருதியும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதீப்பீடு ரூ. 8,00,000/— ஆகும். பணியின் அவசர அவசியம் கருதி இப்பராமரிப்பு பணிகள் நகராட்சிகள் சட்டம் விதி எண் 15ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணி குடிநீர் பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி விதி 15–ன் படி பணியை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1576 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:8**

**கோப்பு எண் : 207/2020 /இ1**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் அமராவதி மற்றும் காவேரி குடிநீர் திட்டங்களில் குடிநீரில் குளோரினேசன் செய்ய சோடியம் ஹைப்போகுளோரைடு திரவம் கலக்கப்பட்டு குடிநீர் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. தற்சமயம் இதற்கான ஒப்பந்தத்தொகை முடிவடைந்துள்ளதால் மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வேலை உத்திரவு வழங்க குறிப்பிட்ட காலம் ஏற்படும். எனவே அதுவரை குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன்கருதியும் சோடியம் ஹைப்போகுளோரைடு விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே இப்பணியை அவசியம் கருதி நகாட்சிகள் சட்டம் விதி எண்.15 ன் கீழ் மேற்கொள்ளலாம். இதற்கான உத்தேச மதிப்பீடு 4,10,000/– மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணி குடிநீர் பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி விதி 15–ன் படி பணியை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1577 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:9**

**கோப்பு எண் : 279 /2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் அமராவதி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் தாளக்கரை தலைமை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 17.5 எச்.பி டர்பைன் மின்மோட்டார் மற்றும் 100கு.வே HSC PUMBSET இரண்டும் பழுதடைந்துள்ளது இதனால் இத்திட்டத்தில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதியும் குடிநீர் அவசர அவசியம் கருதியும் இந்த மின்மோட்டார்களை உடன் பழுதுகள் சரிசெய்து பொருத்த வேண்டியுள்ளது. பணியின் அவசியம் கருதி இப்பராமரிப்பு பணியினை நகராட்சிகள் சட்டம் விதி எண் 15ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள இதற்கான உத்தேச மதீப்பீடு ரூ.3,65,000/– மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணி குடிநீர் பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி விதி 15–ன் படி பணியை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1578 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:10**

**கோப்பு எண் : 282 /2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பயன்படு அமராவதி ஆற்றுக் குடிநீர் திட்டத்தில் தாராபுரம் ரோடு தண்ணீர் பந்தல் நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 50 எச்.பி HSC PUMBSET பழுதுகள் ஏற்பட்டுள்ளது இதனால் இத்திட்டத்தில் குடிநீர் விநியாகம் செய்ய இயலாத நிலையுள்ளது. எனவே இந்த மின்மோட்டாரை பழுதுகள் சரிசெய்து பொருத்த வேண்டியுள்ளது.

வார்டு எண் 1 வாய்க்கால் மேடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 5 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் குழாய் பழுதுகள் காரணமாக உடைந்து ஆழ்குழாய் கிணற்றுக்குள் விழுந்து விட்டது. எனவே இந்த பழுதினை சரிசெய்து மின்மோட்டாரை ஆழ்குழாய் கிணற்றிலிருந்து வெளியே இழுத்து பராமரிப்பு பணிகள் செய்து பொருத்த வேண்டியுள்ளது.

லட்சுமி நகர் 13 சிவன்மால முருகன்திருமண மண்டபம் அருகில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 5 எச்.பி நீர் மூழ்கி மின் மோட்டாரின் பம்பிங் குழாய்கள் பழுதடைந்துள்ளது. எனவே இந்த குழாய்களை மாற்றி புதியதாக பொருத்த வேண்டியுள்ளது.

பங்களாபுதூர் ரோடு OHT க்கு தண்ணீர் ஏற்ற பயன்படும் 5 எச்.பி நீர் மூழ் மின்மோட்டார் மிகவும் பழுதடைந்து பராமரிப்பு பணிக செய்ய இயலாத நிலையில் உள்ளது எனவே இந்த மின்மோட்டாருக்கு பதிலாக ஆழமாக தண்ணீர் எடுக்கும் வகையில் 7.5 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் பொருத்த வேண்டியுள்ளது.

வார்டு எண் 13 வெள்ளியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்ட SUBMERSIPLE மின்மோட்டார் பழுதடைந்து மீண்டும் பழுதுகள் சரிசெய்ய இயலாத நிலையில் உபயோகமற்ற நிலையில் உள்ளது. எனவே இந்த மின் மோட்டாருக்கு பதிலாக 5 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் பொருத்தப்பட வேண்டும்.

மேற்படி பணிகள் பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் அவசர அவசியம் கருதியும் உடன் சரிசெய்து பராமரிக்க வேண்டியுள்ளது. எனவே இப்பணிகள் நகராட்சி சட்டம் விதி எண் 15ன் கீழ் மேற்கொள்ளாம். (தற்சமயம் கொரானா ஊரடங்கு உள்ளதால் டெண்டர் கோர இயலாது). இதற்கான உத்தேச மதிப்பீட்டு ரூ.6,00,000/—ஆகும் மன்றம் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணி குடிநீர் பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி விதி 15—ன் படி பணியை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1579 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:11**

**கோப்பு எண் : 278 /2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட ஏ.சி நகர் வாய்கக்கால் மேடு பகுதியில் சரிவர குடிநீர் விநியோகம் கிடைப்பதில்லை. எனவே, இப்பகுதி பொதுமக்கள் குடிநீருக்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்தப் பகுதியில் குழாய் விஸ்தரிப்பு செய்யும் கேட் வால்வுகள் பொருத்தியும் குடிநீர் விநியோகத்தை சீரமைக்க வேண்டியதுள்ளது.

கங்கா நகர் பகுதியில் மற்றும் தாராபுரம் ரோடு கேஸ் பங்க் எதிரில் குடிநீர் விநியோகத்தை சீராக்கும் பொருட்டு வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கும் பொருட்டு புதிய கேட் வால்வுகள் பொருத்துதல் மற்றும் பகிர்மான குடிநீர் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்படி பணிகள் குடிநீர் அவசர அவசியம் கருதி பொதுமக்கள் நலன் கருதியும் உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதீப்பீடு ரூ.2,20,000/– ஆகும். பணியின் அவசியம் கருதி இப்பணியினை நகராட்சிகள் சட்ட விதி எண் 15ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணி குடிநீர் பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி விதி 15–ன் படி பணியை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1580 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:12**

**கோப்பு எண் : 293 /2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள விபரப்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1. செம்மாங்காளி பாளையம் சிறுமின் விசைப்பம்பு திட்டத்தில் பிவிசி வாட்டர் டேங்க் பழுதடைந்துள்ளது. இதனால், பிவிசி டேங்க் மாற்றி பொருத்த வேண்டியுள்ளது.
2. பங்களாபுதூர் ரோடு OHT பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, இதனை பழுதுகள் நீக்கம் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.
3. பங்களாபுதூர் குறுக்கு வீதியில் கழிவுநீர் தேங்கியுள்ளது. இதனால், பொது சுகாதார கேடு ஏற்படும் நிலையுள்ளது. எனவே, இந்த கழிவுநீர் தேங்காமல் வெளியேற குழாய் அமைத்து வெளியேற்ற வேண்டியுள்ளது.

மேற்படி பணிகள் அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும், மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.2.25 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1581 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்:13

கோப்பு எண் : 284 /2020 /இ1

காங்கயம் நகராட்சியில் உடையார் காலணி பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகளில் தண்ணீர் அளவு மிகவும் குறைந்துள்ளதால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதாகவும் எனவே, புதியதாக ஒரு ஆழ்குழாய் அமைத்து தருமாறும் திரு.துரைசாமி, முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் விண்ணப்பித்துள்ளார். பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் அவசியம் கருதியும் இப்பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது.
இதற்கான உத்தேச மதீப்பீடு ரூ.3,50,000/—க்கு (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1582 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்:14

கோப்பு எண் :283 /2020 /இ1

காங்கயம் நகராட்சியில் கீழ்க்காணும் பணிகள் அவசியமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அமராவதி குடிநீர் திட்டத்தின் தாளக்கரை தலைமை நீரேற்று நிலையத்திற்கு செல்லும் பாதை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இந்த சாலையின் குறுக்காக தண்ணீர் செல்வதால் சாலையில் அரிப்பு ஏற்பட்டு பழுதடைந்துள்ளது. இதனால், தலைமை நீரேற்று நிலையத்திற்கு மின் மோட்டார் பழுதுகள், ஆலம் மற்றும் Hypochlorite ஆகியவைகள் கொண்டு செல்ல போக்குவரத்து வசதி இல்லாத நிலையில் உள்ளது. எனவே, இந்த சாலையை சீரமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

அமராவதி குடிநீர் திட்டத்தின் தண்ணீர் பந்தல் நீருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 50 எச்.பி மின் மோட்டார்களில் ஒன்றில் வைண்டிங் பழுதுகள் ஏற்பட்டுள்ளது.
மற்றொரு மின் மோட்டார் பம்ப் பழுதடைந்துள்ளது. இரண்டு மின் மோட்டார்களும் பழுதடைந்துள்ளதால் இதனை உடன் பழுதுகள் சரி செய்து பொருத்த வேண்டியுள்ளது.

தலைமை நீரேற்று நிலையம் தாளக்கரையில் 20KVA கெபாசிட்டர்கள் 2 எண்ணிக்கை பழுதடைந்துள்ளதால் புதியதாக பொருத்த வேண்டியுள்ளது.

மேற்படி பணிகள் பொதுமக்கள் நலன் கருதியும் குடிநீர் அவசர அவசியம் கருதியும் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதீப்பீடு ரூ.10,00,000/—க்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1583 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:15**

**கோப்பு எண் : 288 /2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பங்களாபுதூர் செல்லும் சாலையில் மிகவும் பழுதுகள் ஏற்பட்டுள்ளது. இதனால் வாகனங்கள் செல்ல மிகவும் சிரமப்படுவதாக இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனவே, இந்த சாலைகளை சீரமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1584 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:16**

**கோப்பு எண் : 289 /2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 முதல் 18 வரையிலான பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சிறு மின்விசைப்பம்பு திட்டங்கள், குடிநீர் குழாய்கள், கேட்வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் அவசர அவசியம் கருதியும் உடனுக்குடன் பழுதுகள் சரி செய்து பொருத்த வேண்டியுள்ளது. இந்த பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளலாம். இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1585 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:17**

**கோப்பு எண் : 290 /2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 9 வரையிலான பகுதிகளில் குடிநீர் குழாய்கள், மின் மோட்டார்கள், சிறு மின்விசைப்பம்பு திட்டங்களில் ஏற்படும் பழுதுகளை பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் அவசர அவசியம் கருதியும் உடனுக்குடன் பழுதுகள் சரி செய்து பொருத்த வேண்டியுள்ளது. இந்த பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளலாம். இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1586 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:18**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சிவன் நகர் முதல் தொட்டியபட்டி சாலை வரை உள்ள மண்சாலையில் பல இடங்களில் குண்டும் குழியுமாக உள்ளது. மேலும், மழைக்காலங்களில் மழைநீர் இந்த சாலையில் அரிப்பை ஏற்படுத்தி விடுவதால் மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளது. எனவே, பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த சாலையை சீரமைத்து குழாய் பாலங்கள் அமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.**10.00** இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1587 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:19**

**கோப்பு எண் : 292 /2020 /இ1**

காங்கயம் நகராட்சியில் அமராவதி குடிநீர் திட்டம், காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் என இரண்டு குடிநீர் திட்டங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும், நூற்றுக்கும் மேற்பட்ட சிறு மின்விசைப் பம்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை பராமரித்து இயக்க நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லை. எனவே, ஒப்பந்த அடிப்படையில் கீழ்கண்டுள்ள பணியாளர்களால் பயன்படுத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது.

1. குழாய் திருப்புனர் – 5 no
2. Pump operator – 7 no
3. Jeep Driver – 1 no
4. Technical assistant – 1 no

மேற்படி பணியாளர்களின் ஒப்பந்த காலம் முடிவடையும் நிலையில் உள்ளது. எனவே, ஒப்பந்த அடிப்படையில் இப்பணியாளர்களை வழங்க வேண்டியுள்ளது. இதற்கான இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.**10.00** இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1588 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:20**

**கோப்பு எண் : 291 /2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள எரிவாயு தகன மேடையில் Gasifier unit மிகவும் பழுதடைந்துள்ளது. இதன் தொடர்புடைய குழாய்கள் பழுதடைந்துள்ளது. எனவே, எரிவாயு தகனமேடையில் தகனம் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, Gasifier unit –யை Copper materialல் மாற்றியமைத்தால்

அடிக்கடி பழுதுகள் ஏற்படாது. எனவே, இதனை சரி செய்து தேவையான உபகரணங்களை மாற்றிப் பொருத்தலாம். இந்த பராமரிப்பு பணி மிகவும் அவசியமாக உள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1 .மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1589 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:21**

**கோப்பு எண் : 1646/2019 /சி1**

காங்கயம் நகராட்சியில் பணிபுரிந்து 2020–2021 ஆம் நிதியாண்டில் ஓய்வு பெற உள்ள திரு.ப.சின்னதுரை, குடிநீர் திட்ட காவலர் அவர்களுக்கு சிறப்பு சேமநலநிதி திட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய அரசு பங்கு தொகை ரூ.10,000/– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1590 . நாள்.30.04.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்)XXXXX
திரு.பு.பொன்னம்பலம்
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி